கொதிகலன்கள் துணை இயக்குநர், பெல் வட்டம், திருச்சிராப்பள்ளி-14.
அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்.

----------

முன்னிலை: திரு. அ. சிவக்குமார், பி.இ., எம்.எஸ்.,

செ.மு.ஆணை எண். அ/1298 /பெவ /2020/ நாள். 25-10-2021.

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி - செல்வி. ரா. அர்ச்சனா, இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி வேட்பாளர்களை தெரிவு செய்து பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – ரா. அர்ச்சனா, இளநிலை உதவியாளர் - கொதிகலன்கள் துணை இயக்குநர் அலுவலகம், பெல் வட்டம், திருச்சிராப்பள்ளியில் மறுபணியமர்வாணை வழங்கபட்டது – 23-09-2020மு.ப. இளநிலை உதவியாளர் பணியில் பணியேற்றது - செல்வி ரா. அர்ச்சனா, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தி ஆணைகள் - வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.2496/பிஎஸ்டி-1/2020 நாள்: 29-05-2020.
2. முதன்மை தலைமைப் பொறியாளர் (நீ.ஆ.து), தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித்துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை எண்.எஸ்.3(3)/35935/2020 நாள்: 17-09-2020.
3. கொதிகலன்கள் இயக்குநர், தமிழ்நாடு, சென்னை -5 அவர்களின் செயல்முறை ஆணை எண். பணி/1443-1/2020-1 நாள்: 21-09-2021.
4. செல்வி ரா. அர்ச்சனா, இளநிலை உதவியாளரின் பணியேற்பு கடிதம் நாள்: 23-09-2020.

------------

பார்வையில் காணும் கடிதங்களின் படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டி தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு செல்வி. இரா. அர்ச்சனா, இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு இவ்வட்ட அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார்.

---2

செல்வி. இரா. அர்ச்சனா, இளநிலை உதவியாளரின் பணிகள், இவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 23-09-2020மு.ப. முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு ஆணையிடப்படுகின்றது.

மேற்படி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் சென்னை கிளை மற்றும் மதுரைக்கிளையில், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-யின் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தமிழ்நாடு அமைச்சுப் பணிதொகுதியின்படி தகுதிகாண் பருவம் தொடங்கவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவ காலத்தை முடிப்பதற்குள் பவானிசாகர் குடிமைப்பணிகள் பயிற்சியை முடித்திருக்க வேண்டும். மேலும் இவ்வலுவலர் இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளில் இரண்டு ஆண்டுகள் தகுதி, தகுதிகாண் பருவத்தினை முடிக்க வேண்டும் எனவும் இதன் மூலம் ஆணையிடப்படுகின்றது.

கொதிகலன்கள் துணை இயக்குநர்,
பெல் வட்டம், திருச்சிராப்பள்ளி-14.

பெறுநர்:
செல்வி. இரா. அர்ச்சனா, இளநிலை உதவியாளர்.

நகல்: கோப்பிற்கு

நகல்: கொதிகலன்கள் இயக்குநர், தமிழ்நாடு, சென்னை -5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: முதன்மைத் தலைமைப் பொறியாளர் (நீ.ஆ.து.), தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை -5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.